Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Marriage Rituals according to *Tolkappiyam*

**Dr. P. Partheeban**, Assistant Professor of Tamil, Sadakathullah Appa College, Tirunelveli.
**ORCiD: https://orcid.org/0000-0002-4388-6169**
**DOI: 10.5281/zenodo.7312757**

## Abstract

*According to the grammatical text 'Tholkapiyam', Porulilakkanam is divided into two types: 'kalavu' and 'karpu'. Of the two disciplines, kalavu is a love-centred activity. These methods are also recognized in society as the method in which the elders pray to run a family in a love-centred way. Whether these marriages were accepted by society? What is the role of the friend in this marriage? What is the position of elopement in marriage? Were marriages not accepted by parents as acceptable as marriages officiated by the parents? How did ceremonial marriages come about? This article examines the presence of such songs as examples from Tholkapiyam of Sangam literature.*

**Keywords:** Marriage Rituals, *Tolkappiyam.*

## References

[1] Madhaiyan. P, *Akathinai Kotpatum Sanga Akakavithai Marapum.* Paavai Publications, December 2009.
[2 ]Madhaiyan. P. *Sanga Ilakkiyaththil Kudumbam*. New Century Book House Pvt. Ltd., June 2010.
[3] Manikkam.V.S. *Tamil Kadhal*. Meenakshi Puthaka Nilayam, March 2013.
[4] Raj Gowthaman, *Aakol Poosalum Perunkarkala Nagareegamum.* Tamizhini, August 2012.
[5] Silambu N. Selvarasu. *Akapporul Kotpadu Tholkappiyam – Sanga Ilakkiyam Oppeedu.* New Century Book House Pvt. Ltd., April 2018.
[6] Subbu Reddiar. N. *Tolkappiam Kaatum Vaazhkkai*. Sandhya Publications, 2021
[7] Partheeban, P. "The Talks of the People at the Situation of Elopement" *International Journal of Tamil Language and Literary Studies*, Volume-4, Special Issue-2, June 2022, PP. 303-313, DOI: 10.5281/zenodo.7059341
[8] Subramanium. S. V. *Sanga Ilakkiyam Ettuththogai* - 1, 2, 3, Manivasagar Publications, 2012.
[9] Subramanium. S. V. T*holkapiyam Thelivurai*. Manivasagar Publications, July 2006.
[10] Tamilannal. *Sanga Marabu.* Meenakshi Puthaka Nilayam, August 2012.
[11] Thamotharan, A. Central Institute of Classical Tamil, 2013

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தொல்காப்பியம் கூறும் மணமுறைகள்

**முனைவர் பொ. பார்த்தீபன்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி.
ORCiD: https://orcid.org/0000-0002-4388-6169
DOI: 10.5281/zenodo.7312757

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழின் தொன்மையான இலக்கண நூலான "தொல்காப்பியம்" கூறும் பொருளிலக்கணத்தில் அகப்பொருள் களவென்றும் கற்பென்றும் இரு வகைப்படுத்தப் படுகிறது. களவு , கற்பு என்ற இரு ஒழுக்க நெறிகளில் களவொழுக்கம் என்பது காதலை மையப்படுத்திய செயல்பாடாகவே உள்ளது. காதலை மையப்படுத்திய விதத்தில் தலைமக்கள் இல்லறம் நடத்த வேண்டி செய்து கொள்ளும் மணமுறையை களவு வெளிப்பட வரைதல் படாமைவரைதல் என்று வகைப்படுத்தியுள்ள முறையையும் இம்மண முறைகள் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்டனவா? இக்களவு மணத்தில் தோழியின் பங்கு எத்தகையது? இக்களவு மணத்தில் உடன்போக்கு வரைவு கடாதல், அலர் முதலியவை பெறுமிடம் எத்தகையது? பெற்றோர் முன்னிலையில் நடக்கும் திருமணங்களைப் போல் பெற்றோர்களால் நடத்திவைக்கப்படாத திருமணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்ததா? சடங்கு முறைகளோடு கூடிய திருமணங்கள் எவ்வாறு வழக்கில் வந்தன? என்று தொல்காப்பிய உதாரணங்களைக் கொண்டும் சங்க இலக்கியங்களில் இவ்வாறானப் பாடல்கள் இடம்பெற்றுள்ளவற்றை ஒப்புமைப்படுத்தியும் ஆய்வு செய்யும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**திறவுச்சொற்கள்**: *தொல்காப்பியம்*, களவு, கற்பு, கரணம், மணமுறை.

**முன்னுரை**

எழுத்து, சொல், பொருள் என மூன்று இலக்கணங்களைப் பேசி பொருளிலக்கணத்தில் மக்களின் அகவாழ்க்கை நெறிகள், புறவாழ்க்கை நெறிகள் என விரிவாய்ப்பேசியும் அகவாழ்க்கையைக் களவென்றும் கற்பென்றும் பேசுகிறது தொல்காப்பியம். இவை மனமொத்த தலைமக்களின் வாழ்வியலை விவரிக்கிறது. இவ்விரண்டையும் வாழ்க்கை முறையாகக் கொள்ள வேண்டுமா? அல்லது மணமுறையாக கொள்ள வேண்டுமா? என்ற கேள்வி நம்முன் விடையின்றி நிற்காமல் செய்ய வேண்டும். மனமொத்த தலைமக்களின் வாழ்வியல் விவரிப்பில் தொல்காப்பியம் பேசும் மணமுறை குறித்த கருத்துக்களை உற்றுநோக்கி ஆராயப்பட வேண்டியுள்ளது.

**களவும் கற்பும்**

தொல்காப்பியர் கூறும் களவு கற்பு ஆகியவற்றை வாழ்க்கை முறையாகக் கொண்டால்

அகவாழ்க்கையின் முற்பகுதிகளவாகவும் பிற்பகுதி கற்பாகவும் அமையும். களவையும் கற்பையும் மணமுறையாகக் கொண்டால் களவு மணம் வேறு கற்பு மணம் வேறு என்று இரண்டாக அமையும். இக்கருத்தைத் தொல்தமிழர் திருமண முறைகள் நூலில் சிலம்பு. நா.செல்வராசு (பக்.136) கூறுகிறார்.

**தொல்காப்பியம் கூறும் கற்பு**

தொல்காப்பியப் பொருளதிகாரம் களவு, கற்பு என்ற இருவகை ஒழுக்க நெறிகளைப் பேசுகிறது. இவ்வொழுக்கங்களைக் மணநெறியாக கொள்ளலாம். தொல்காப்பியர் கூறும் கற்பெனப்படுவது இருவகையாக உள்ளது. அவை திருமணம் செய்து கொள்ளும் தகுதியுடைய தலைவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தற்குரிய மரபினை உடைய தலைவியின் பெற்றோர் கரணம் என்று சொல்லப்படும் சடங்கு முறையோடு திருமணம் நடத்திவைக்க தலைவன் திருமணம் செய்து கொள்ளும் முறை கற்பு எனப்படுகிறது. இதனை "கற்பெனப்படுவது கரணமொடு..... (நூ. 1088) என்ற நூற்பாவில் தொல்காப்பியம் கூறுகிறது. இவ்வாறு பெற்றோர் திருமணம் செய்து கொடுக்காமல் (கொடுக்கக் கொள்ளும் முறையிலிருந்து) வேறுபட்டுப் பெற்றோர் கட்டுப்பாட்டை மீறித் தலைவனைத் தானே தேர்ந்தெடுக்கும் முறை இருந்துள்ளது. தலைவியின் காதலுக்குத் தலைவியின் பெற்றோர் உடன்படாத நிலையில், (இற்செறிப்பு இன்னல் மிகுதியாலும் அறத்தொடு நிற்றல் சரிவர நிகழாத நிலையிலும்) தலைவி தலைவனோடு வீட்டை விட்டு தலைவனூர்க்குச் சென்று திருமணம் செய்து கொள்ளும் உடன்போக்குத் திருமணமுறையும் இருந்துள்ளது. இத்திருமண முறையைத் தொல்காப்பியம், "கொடுப்போ ரின்றியுங்....'' (நூற். 1089) என்ற நூற்பாவில் கூறுகிறது. இவ்வுடன் போக்கு மணமுறை கொடுப்போர் கொடுக்கக் கொள்ளும் ஏற்பாட்டுத் திருமணத்திற்கு ஒப்பானதாகவும் கரணம் என்ற சடங்கு முறை இம்மண முறையிலும் மேற்கொள்ளப்படுவதாகவும் சமூகம் ஏற்றுக்கொண்ட முறையாக அமைந்ததாகவும் கொள்வதற்கு மேற்கண்ட நூற்பா (1089) சான்று பகர்கிறது. களவொழுக்கத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு நிலைகளைப் போலவே கற்பொழுக்கத்திலும் சில நிலைகளை ''மறைவெளிப்படுதலும் தமரிற்…''(நூற்.1443) என்று தொல்காப்பியம் கூறுகிறது.

**களவின் வழிப்பட்ட திருமணம்**

"தலைவனும் தலைவியும் இயல்பூக்கத்தினாலும் இனவிருத்தி வேண்டியும் குடும்பமாக மாறுவதற்கு முன்பு கடைபிடிக்கும்ஒழுக்கநெறிகளே களவும் கற்புமாகும். இந்த ஒழுக்கங்களை மணநெறியாகவும் கொள்ளலாம்'' என்கிறார் காலந்தோறும் திருமணம் என்னும் நூலில் வெ.மன்னார் (பக்.30). தொல்காப்பியப் பொருளதிகாரம் பேசும் களவு, கற்பு என்ற இரு ஒழுக்க நெறிகளில் களவொழுக்கம் என்பதுகாதலை மையப்படுத்தியச் செயல்பாடாகவே இருந்துள்ளது. பிறரறியாமல் காமத்தின் விளைவாய்த் தலைவனும் தலைவியும் கூடுதலைக் களவுப்புணர்ச்சி அல்லது காமக்கூட்டம் என்கிறது தொல்காப்பியம் .காமக்கூட்டம் என்பதற்கு நச்சினார்க்கினியர் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்று உரை கூறுகிறார். களவுக்காதல்

தெய்வத்தன்மை கொண்டதென விளக்கி காதல் வாழ்க்கை அறத்தின் பாற்பட்டதெனவும் (நூற். 1441) தொல்காப்பியம் பேசுகிறது. பெற்றோர் ஏற்பாட்டுத் திருமணமாகச் செய்யாமல் தனக்குப் பிடித்தத் துணையைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு பின் ஒருவரையொருவர் நினைப்பதும் மெலிவதும் என களவொழுக்கத்தின் ஒழுகலாறுகளை வரையறை செய்யுமிடத்து தொல்காப்பியம் "வேட்கையொரு தலை யுள்ளுதல்..." (தொல் 1046) என்றும் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியர் கூட்டம் என்று நான்கு நிலைகளில் இக்(களவுக்) காதல் இருக்கும் என்பதை"காமப்புணர்ச்சியும் இடந்தலைப்…." (நூற்.1442) என்றும் தொல்காப்பியம் சுட்டுகிறது. ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு நிகழ்வுகள் உண்டு.களவு மணத்தில் பொய்யும் வழுவும் தோன்றியதால் சான்றோர்கள் நடத்தி வைக்கும் சடங்குடன் கூடிய மணமுறை வழக்கில் வந்தது என்பதையும் தொல்காப்பியர்"பொய்யும் வழுவும்...." (நூற்.1091) என்று கூறுகிறார்.

**வரைதல் வகை**

களவுக்காதல் வழிபட்ட திருமணத்தைப் பேசும் தொல்காப்பியம் களவு வெளிப்பட்ட பின் மணத்தல், களவு வெளிப்படா முன் மணத்தல் என இரண்டாகக் கூறுகிறது. தலைவி அறத்தொடு நின்று களவு வெளிப்படும் முன் ஊர் அறிய தலைவனை மணம் புரிதல் 'படாமை வரைதல்' என்றும் களவு வெளிப்பட்ட பின் பெற்றோரும் ஊராரும் அதை ஏற்று ஊரறிய மணம் புரிதல் 'வெளிப்பட வரைதல்' என்றும் தொல்காப்பியம் சுட்டுகிறது. "வெளிப்பட வரைதல்...." (நூற்.1086) என்ற நூற்பா இதைத் தெளிவு படுத்துகிறது. இவற்றுள் வெளிப்படவரைதல் பற்றி மேலும்பேசும் தொல்காப்பியம், 'வெளிப்படை தானே...." (நூற்.1087) என்ற நூற்பாவில், ஓதல், பகை, தூது காரணமாகப் பிரிந்துசெல்ல வேண்டியிருந்தால் களவு வெளிப்பட்ட பின் நடைபெறும் திருமணத்திற்குப் பின் தான் பிரிந்து செல்ல வேண்டும் என்கிறது . களவொழுக்கத்தின் போது பொருள் வயிற்பிரிதலும் வேந்தர்க் குற்றுழிப்பிரிதலும் காவற்பிரிதலும் நிகழுமே தவிர ஓதற்பிரிவும் பகைவயிற் பிரிவும் தூதிற்பிரிவும் தலைவனிடம் நிகழாது என்கிறது தொல்காப்பியம்.

களவொழுக்கத்தில் ஈடுபட்டுள்ள தலைவன் திருமணத்தைக் காலம் தாழ்த்தி களவை நீட்டிக்கும் போது தோழி விரைவில் தலைவியைத் திருமணம் செய்ய வற்புறுத்துவாள். இது 'வரைவுகடா(வு)தல்' எனப்பட்டது. வரைவென்பது மணமாகும். இவ்வாறு வரைவு கடாதல் நிகழ்ந்த பின்பும் களவொழுக்கமே நீண்டு கொண்டிருந்தால், தலைவி களவொழுக்கத்தை வெளிப்படச் செய்து மணம்புரியும் நிலையைத் தலைவி ஏற்படுத்துதலே, அறத்தொடு நிற்றல் எனப்பட்டது. இவ்வாறு தலைவி அறத்தொடு நிற்றலுக்குப் பின் பெற்றோர் மணம் முடித்துக் கொடுத்தலை "மறை வெளிப்...." (தொல்.1443) என்ற வரி விளக்குகிறது. களவின் இறுதியாக அறத்தொடு நிற்றல் அல்லது உடன்போக்கு நிகழும். "இவற்றில் ஒன்று நிகழின் மற்றொன்று நிகழாது" என்பார் தமிழ்க்காதல் நூலில் (பக்.63) வ.சு.ப.மாணிக்கம் அவர்கள். அறத்தொடு நிற்றல் நடக்காத காரணத்தால் தான் உடன்போக்கு நிகழும் எனக்கொள்ளலாம். தோழி

அறத்தொடு நிற்பது தானும் தலைவியும் அறவழியிலேயே இதுவரை நடந்திருப்பதாக உரைக்கும் விதமாக அமையும் எனலாம். ஒரு நியாயத்திற்கான வேண்டுகோளாகவே இதை நம்மால் பார்க்க முடியும். களவைக் கற்பாக மாற்றும் முயற்சியே அறத்தொடு நிற்றல். களவைக் கற்பாக மாற்றுவது உடன்போக்கு. தலைவனும் தலைவியும் நீண்ட காலம் களவொழுக்கத்தில் ஈடுபடும் போது அது நாளடைவில் வெளிப்படுவது 'அலர்' எனப்பட்டது. இவ்வலரை அறிந்த தோழி அவ்வலர் அடங்கும் பொருட்டு தலைவனிடம் ஒருவழித்தணத் தலையோ உடன்போக்கு மேற்கொள்வதையோ வரைந்து கோடலையோ செய்ய வற்புறுத்துவாள்.

**சங்கஇலக்கியத்தில் களவுக்காதல்**

சங்க இலக்கியத்தில் களவுக்காதல் திருமணத்தில் முடிந்தமை குறித்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன. (நற்.393, குறு 15, 51, 83, 351, ஐங். 103, 148, 230, 294 300, கலி 104, அக. 70, 182, 352). இப்பாடல்களுள் துறைவற்கு (குறு.351), துறைவன் (அக.70), நாடன் (நற்.393, ஐங்.230), வெற்பன் (ஐங்.300) ஆகியோர் காதல் பெண்ணின் பெற்றோரால் ஏற்கப்பட்டதாகத் தெரிகிறது. செல்வ நிலையில் ஒத்தவனாக இல்லாத காரணத்தால் களவுக்காதலுக்கு உடன்பட மறுத்த தாய் தந்தையரை மீறி உடன்போக்கில் சென்ற தலைவி (அகம்.369) குறிப்பிடப்பட்டுள்ளாள். இப்பாடலில் செல்வச் செழிப்புடன் வாழ வேண்டிய தலைவி ஒரு பசுமட்டும் கட்டப்பட்டுள்ள புல்வேய்ந்த குடிசையில் சிலம்பு கழித்தலை மேற்கொள்ளும் நிலைக்கு ஆளாகி விட்டாளே என்று செவிலி வருந்துகிறாள். நற்றிணையின் 110-ம் பாடலும் இதைப் போலவே பொருளாதார ஏற்றத்தாழ்வைப் பேசுகிறது. சங்ககாலத் திருமணங்கள் பெண்ணை இன்னாருக்குத்தான் கொடுப்பது என்ற வரையறையோடு நடைபெற்றதை முல்லைக்கலிப்பாடலான 'ஆயர் மகனாயின் ஆயமகள் நீ ஆயின்.... (107-19) என்ற பாடல் காதல் மணமானாலும் ஒத்த குடிக்குள் நடக்கும் திருமணமே ஏற்கப்பட்டதை அறிய முடிகிறது.

ஐங்குறுநூற்றின் 230-ம் பாடல், 'சிறுதினைக் காவலனாகி பெரிதுறின்..." என்று தொடங்கும் இப்பாடல் குறவர்குலப் பெண்ணுக்கும் ஆணுக்கும் நடைபெற்ற மணத்தை குறிப்பிட்டுள்ளது. வரைவு வேண்டித் தலைவனோ தலைவனின் சுற்றத்தினரோ வந்தபோது அதை மறுத்ததை வெளிப்படுத்தும் விதமாக ஐங்குறுநூற்றில் பாடல்கள் (212,218,228) அமைந்துள்ளன. மகட்பாற் காஞ்சிப்பாடல்கள் காட்டும் திருமணம் மிகமிக வரையறுத்த நிலையினதாக, இன்னார்க்கு மட்டுமே பெண்ணைத் தருவது என்ற மரபை உடையதாக இருந்ததை அறியமுடிகின்றன. 'இரும்பனை யன்ன பெருங்கை யானை...'(340:7) திருநயத் தக்க பண்பினவள் நலனே (342:5) புரையோ ரல்லோர் வரையல ளிவளெனத். (343 :12) இவன் தன்னை மாரே (345:12) முதுகுடி மன்னன் மகளைத் திருமணம் செய்வதற்கு உரியவர். வேந்தர் அல்லர் என்பதையும் யார் என்பதையும் மேற்கண்ட பாடல்கள் உணர்த்துகின்றன. தலைவியின் வதுவையுள் களவுக்காதல் வெளிப்படாதவாறு நடந்து கொள்வாயா எனத் தலைவியைத் தோழி கேட்பதாக அறத்தொடுநிற்றல் கூற்றில் அமைந்துள்ள பாடலொன்று கூறுகிறது. கலித்தொகையின் 39- ம் பாடலில் "வதுவையுள் நீங்கள் இருவரும் முன்பு அறியாதவர்போல

நடந்து கொள்வீர்களா, பழைய நட்பைவெளிக்காட்டாமல் நடந்து கொள்வீர்களா, எனக்கேட்டுத் தானும் அக்களவுக் காதலை அறியாதவள் போலநடந்து கொள்வேன் என்கிறாள் தோழி இப்பாடலிலும் குறிஞ்சி நிலப் பிறப்பு, குறவரினப் பிறப்பு சுட்டப்பட்டுள்ளது. தலைவியின் களவுத்தொடர்பு தெரிந்திருந்தால் அத்தலைவனுக்கே நான் என் மகளைத் திருமணம் செய்து வைத்திருப்பேனே என உடன்போக்குச் சென்ற தலைவியை எண்ணி நற்றாய் கூறும் "தன்னமர்ஆயமொடு…" (ஐங்.379) என்ற பாடல் சுட்டுகிறது. இவ்விடம் அறத்தொடுநிற்றல் நிகழ்ந்திருந்தால் இவ்வுடன் போக்கு நிகழ்ந்திருக்காது என்பதை உணர முடிகிறது. வேறொருவருக்குத் திருமண ஏற்பாட்டைச் செய்த தம் சுற்றத்தாரின் செயலை மீறித் தலைவி தலைவனோடு உடன்போக்கு மேற்கொண்ட நிலை அகம் 221-ம்பாடலில் சுட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தொல்காப்பியம் கூறும் மணமுறைகளான களவு, கற்பு குறித்து உதாரணப்படுத்தும் பாடல்கள் சங்க இலக்கியத்தில் மிகுந்து காணப்படுகின்றன. இதைத் தமிழிலக்கிய ஆய்வாளர் பலர் வகைபடுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

தொல்காப்பியர் கூறும் மேற்சொன்ன கருத்துக்களைக் கொண்டு கற்பு ஒழுக்கத்தில் பெற்றோர் பெரியோர் முன்னர் தகுதி வாய்ந்த ஆடவனுக்குத் தலைவியைப் பெற்றோர் மணமுடித்துக் கொடுத்தனர் என்றும் இவ்வாறு கொடுப்போரின்றியும் திருமணம் நடைபெற்றிருக்கிறது என்பதையும் அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மணமுறையாக இருந்துள்ளதையும் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியர் கூட்டம் என்ற நிலையில் இக்களவுக்காதல் இருக்குமென்றும் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னரே பெரியோர் முன்னிலையில் சடங்கு நிகழ்த்தி செய்யும் திருமணமுறை வழக்கில் வந்ததெனவும் களவு வெளிப்பட்டு வரைதல் படாமை வரைதல் என இருவகை வரைதல் இருந்துள்ளதையும் அறத்தொடுநிற்றல், உடன் போக்கில் ஒன்று நிகழின் மற்றொன்று நிகழாது என்பதையும் அலர் வெளிப்படுவதால் விரைந்து மணமுடிக்க தோழியால் வலியுறுத்தப்பட்டதையும் களவும் கற்பும் வெறும் வாழ்க்கை முறையாக மட்டும் கொள்ளாமல் திருமணமுறையாகவும் கொள்ள தொல்காப்பியத்தில் தரவுகள் மிகுந்திருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] சிலம்பு நா. செல்வராசு. *அகப்பொருள் கோட்பாடு தொல்காப்பியம்* - சங்க இலக்கியம் ஒப்பீடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். , ஏப்ரல் 2018.

[2] சுப்பு ரெட்டியார். ந, *தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை*. சந்தியா பதிப்பகம், 2021.

[3] சுப்பிரமணியன். ச. வே. *சங்க இலக்கியம் எட்டுத்தொகை* - 1, 2, 3, மணிவாசகர் பதிப்பகம், 2012.

[4] சுப்பிரமணியன். ச. வே. *தொல்காப்பியம் தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், சூலை 2006.

[5] தமிழண்ணல். *சங்க மரபு*. மீனாட்சி புத்தக நிலையம், ஆகஸ்ட் 2012.

[6] தாமோதரன் . அ (ப.ஆ). *செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்*. சென்னை 2013.

[7] பார்த்தீபன், பொ. "உடன் போக்குச் சூழலில் கண்டோர் கூற்று." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி-4, இதழ்-2, ஜூன் 2022, பக். 303-313 DOI: 10.5281/zenodo.7059341

[8] மாணிக்கம். சுப. வ. *தமிழ்க் காதல்*. மீனாட்சி புத்தக நிலையம், மார்ச் 2013.

[9] மாதையன். பெ. *அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்*. பாவை பப்ளிகேஷன்ஸ், டிசம்பர் 2009.

[10] மாதையன். பெ. *சங்க இலக்கியத்தில் குடும்பம்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். ஜூன் 2010.

[11] ராஜ் கௌதமன். ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும். தமிழினி இ டிசம்பர் 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.